உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

[தொகுதி-உகூ.] பிரமோதூதவருஷ மார்கழிமீ [பகுதி-உ.

Vol. XXIX. December-1930. January-1931. No. 2.

வெண்பாமாலையாராய்ச்சி.

[மதுரை, ஸம்ஸ்க்ருதகாலேஜ் ஆசிரியர்,
ஸ்ரீமாந் T. N. அப்பனையங்கார் எழுதுவது.]

[உசு-ம் பக்கத் தொடர்ச்சி.]

[தலைத்தோற்றம்].

இனி, ஆவினங்களை நோயின்றுய்த்த வெட்சிவீரர் தம் உறவு முறையார் மனமகிழுமாறு அவ்விடத்தே வந்துதோன்றுதல் தலைத்தோற்றம் எனப்படும். தலைக்கூடல், தலைப்பிரிவு, தலைப்பெயல், தலைத்தருதல் என்பனபோலத் தலைத்தோற்றம் என்பதும் ஒருசொல். இதனுள் தலை என்னுந் துணைச்சொல்லை வேறுபிரித்தால் அதற்கு இடமும், அதனடியாகப் பொழுதும், பொருளாக வழங்குவதுண்டு. அன்றி அது முதன்மைப் பொருளுணர்த்துமென்றுங் கூறுப. அப்பொருள்களும் ஏற்குமேல் ஈண்டுக் கொள்ளத்தகும். வினைமேற்சென்ற வெட்சியாருடைய நிலைமையறியாது வெறுப்புற்றிருந்த சுற்றத்தார் மகிழ்தூங்குமாறு, அவ்வீரர் வென்றிகொண்டு வந்து தோற்றுதற்சிறப்பால் இத்திணைக்கண் இதுவும் ஒரு துறையாக வேண்டப்பட்டது.

இப்பொருள்நயம் இனிது புலப்படுமாறு தொல்காப்பியம் இதனை "நுவலுழித்தோற்றம்" என்று பெயரிட்டது. "பாடிவீட்டுள்ளோர் மகிழ்ந்துரைத்தற்குக் காரணமான நிரைகொண்டோர் வரவு" என நச்சினார்க்கினியர் இதனை விரித்துரைத்தார். உரையாசிரியர் இளம்பூரணர்

"நுவல்வழித்தோற்றம்" எனப் பாடங்கொண்டு, "தமர் நுவன்றவழித் தோன்றுதல்" எனப் பொருள்கூறினர். அதன்கருத்து, வெட்சிவீரர் மீளாமை குறித்துத் தமராயினோர் ஒருவர்க்கொருவர் நுவலாநிற்புழி ஆநிரைகொண்டு அவர் அங்கே வந்துதோன்றல் என்பதாம். அங்ஙனம் வருகையும் உறவுமுறையார் மனமகிழ்தற்கு ஏதுவாய்ச் சிறத்தலின் அவருரை பெரிதும் அமைவுடைத்தென்க.

இத்துறையின் *வரலாற்றுச்செய்யுளில் "மொய்யண லாநிரை முன்செல்லப் பின்செல்லும்—மையணற்காளை" என்றது, ஆனினம் முன்னேசெல்லப் பின்தொடரும் காந்தையர்பூசலை நின்று நின்று மாற்றி நிரைப்புறங்காத்தற்கு அவற்றின்பின்னேசெல்லும் வீரன் என்றவாறு. இக்கருத்தானே "ஒன்னார் முன்னிலை முருக்கிப் பின்னின்று, நிரையொடு வரூஉம் என்னை" என்றார் புறத்திலும் (262). புல்லார்நடுவட் கொல்லேறுபோலப் போரேற்றுவென்ற பெருமிதம் தோன்ற நிரைப்பின் நடந்துசேறலின் மீளியைக் 'காளை' என்றார்.

'காளை மகிழ் துடி' என்றது, மறவன் தான் மகிழ்ச்சி மீதூர்தலாற் கொட்டும் துடி என்றவாறு. கொட்டுவானதுமகிழ்ச்சி துடியின்மேலேற் றப்பட்டது; அன்றிச் செவிபேற்கும் பிறரும் மகிழ்தற்குக் காரண மாகிய துடி என்றலும் ஒன்று. துடி, ஆகுபெயரான் இங்கு அதன் ஓசை குறிக்கநின்றது.

'கையணல்வைத்த எயிற்றியர் வாட்கண் இடனுட' என்றது, வீரன் நிலையறியாது சிந்தனையிலாழ்ந்த வேட்டுவிச்சியர் உவகையுறுதற் கறிகுறியாக அவருடைய இடக்கண் துடிக்க என்றவாறு.

'துடி ஒருங்கு உவகை உய்த்தன்று' எனக் கூட்டுக. வெற்றிவீர னது மீட்சியைநினைந்து வேட்டுவிச்சியர் தமக்குள்ளே உவகையூர்ந்த செய்தியை, அவன் துடி உய்த்ததாகக் கூறியது ஓர் அணிகருதிநின் றது. மறவன் தான் ஊர்ப்புறம்சார்ந்தமைக்கு மகிழ்தலும் அவன் றுடியோசை யெழுப்புதலும், எயிற்றியர்கண் இடனுடலும், அவன்

*மொய்யணலாநிரைமுன்செல்லப்பின்செல்லு
மையணற்காளைமகிழ்துடி—கையணல்
வைத்தவெயிற்றியர்வாட்கணிடனுட
வுய்த்தன்றுவகையொருங்கு.

வருகைக்கு அவர் இன்புறுதலும் ஆகிய இவையெல்லாம் ஒருகாலத்து உடன்நிகழ்ந்தன என்க. இதுவும் 'கண்டோர்கூற்று' என்பர் நச்சினார்க்கினியர்.

[தந்துநிறை.]

இனித் தந்துநிறையென்பது, வெட்சியார் கொண்டுவந்த நிரையைத் தம் ஊர்ப்புறத்துத் தந்து நிறுத்தலாம். தலைத்தோற்றத்தில் வீரர்வருகையின் அடையாளங்கேட்டு அகமகிழ்ந்த உற்றாரும் பிறருமாய ஊரினுள்ளாரடங்கலும், இதுபொழுது அவர் கொணர்ந்துவிடுத்த ஆநிரைகளைக் கண்ணாரக்கண்டு களிப்பெய்துதல் கூறுவதால் இத்துறை மேலையதனோடு இயைபுடையதாய் இத்திணைக்கு உரிமைபூண்டதாயிற்று. தொல்காப்பியத்தும் இஃது இப்பெயரானே வழங்கப்பட்டது. நிற்க.

நிரையினை அங்ஙனந் தந்துநிறுத்துழி அவற்றினளவுக்கேற்ப மேய்புலங்காண்டலும், தொழுவகத்து இருப்புவகுத்தலும் புல்லுநீருந் தந்து புரந்தருவாரை அமர்த்தலும், ஊரவரெல்லாம் அதனை ஒருங்கு கண்டு வியந்துசேறலும், அவருவகைக் கறிகுறியாக முரசமுதலாயின அதிர்த்தலும் போல்வன அனைத்தும் ஒக்கநிகழ்தலின் அஃது ஒரு விழாக்கோள்போல விமரிசையாய் விளங்குமெனக. அவற்றுள், இதன் வாலாற்றுச்செய்யுள் உவகைமிக்க ஓர் எயிற்றி மணியணிந்த பசுமிக்க மன்றத்தைக்கண்டு புன்முறுவல்பூப்பத் தன் ஐயற்கு வாழ்த்துக்கூறிய செய்தியை மிக அழகாக வருணிக்கின்றது. அங்ஙனமே பிறரும் வந்துகண்டு வாழ்த்திச்சென்றார் பலர் என்பது அதன்குறிப்பாற் கொள்ளப்படும்.

"துளிமுகுரான்முரசங்கொட்டின்வெரூஉம்
களிறுடுதேர்காண்டலுமாற்றா—நளிமணி
நல்லானினநிரைநம்மூர்ப்புறங்கான
மெல்லாம்பெறுகவிடம்".

என்பது இத்துறைக்கு நச்சினார்க்கினியர்காட்டிய பாட்டு. இது நிற்க.

[பாதீடு.]

பாதீடு என்பதற்குப் பகுத்து இடுதல் என்று பொருள். அஃது ஈண்டு, ஆக்கொள்ளுமுயற்சியிற் செய்தார் செய்த வினைவகையறிந்து,

வெட்சியார்தந்த நிரையினை அவரவர்க்குக் கூறிட்டுக்கொடுத்தல் என்னு மளவாக விரித்துரைக்கத்தக்கது.

தொல்காப்பியமும் இத்துறைக்கு இப்பெயரே கூறிற்று. 'ஈத்தலும் ஈதலும்போலப் பாத்தலும் பாதலும் ஒன்றுகலிற் பாதீடாயிற்று" என்பது நச்சினார்க்கினியருரை.

இனி அங்ஙனம் பகுத்து இடுதற்குரியார் ஒள்வாள்மலைந்தோரும், ஒற்றுய்த்துரைத்தோரும், புள்வாய்ப்பச்சொன்ன புலவரும் என்று இத்திறத்தாராவர். தாங்கொள்ளைகொண்ட பொருளை அவர் தம்முள்ளே பகுத்துக்கோடலைக் கூறுவதும் சுவைபயக்குமென்று இதுவும் ஒரு துறையாகக்கொள்ளப்பட்டது. இதன் வரலாற்றுச்செய்யுள் 'கண்டோர்கூற்று' என்றார் நச்சினார்க்கினியர்.

அற்றேல், புலனறிந்தோர்க்கும் புள்ளுரைத்தோர்க்கும் தனித்தனி கொடுத்தலை வேறுவேறு துறைகளாக இவ்வெண்பாமாலை வகுத்தோதியது மிகையேயாம் பிறவெனின்; அற்றன்று. அவை மிகையாகா வகை அத்துறைகளின் ஆராய்ச்சியில் உரைக்கப்பெறும். ஆண்டுக் கண்டுகொள்க.

[உண்டாட்டு.]

இனிப் பாதீடுசெய்தபின் வெட்சியார் தம் சுற்றத்தோடு கள்ளுண்டு களித்தாடுவர். இது உண்டாட்டு எனப்படும். ஆசிரியர் தொல்காப்பியரும் இத்துறைக்கு இப்பெயரே கூறினர்.

உண்டாட்டென்பதில், உண்டல்—மதுவினைமாந்தி இன்புறுதல்; ஆடல்—களிமயக்கத்தாற் காதன்மகளிரோடு விளையாடுதல். இவ்விரு நிகழ்ச்சியும் ஒன்றற்கொன்று நெருங்கிய இயைபுடையவாகையால் ஒரு துறையாய் அடங்கின.

இது ஆண் பெண் ஆகிய இருபாற்சுற்றத்தோடும் கூடி நிகழ்த்துதற்குரியது. "பூங்குழை மகளிர் பொலங்கலத் தேந்திய, தேங்கமழ் தேறலொடு தெளிமது மடுப்பினும்" (பெருங்கதை 2, 14, 60—61) எனவும், "எயிற்றி களிகொண்ட நோக்கம் கவற்ற" (வெ-மா.15) எனவும் வருவனவற்றால் உண்டாட்டில் மகளிரும் உடன் சேர்தல் பெறப்படும்.

"நறவுந்தொடுமின்விடையும்வீழ்மின்
பாசுவலிட்டபுன்காற்பந்தர்ப்
புனல்தரும்இளமணல்நிறையப்பெய்ம்மின்
ஒன்னார்முன்னிலைமுருக்கிப்பின்னின்று
நிரையொடுவரூஉம்என்னைக்கு
உழையோர்தன்னினும்பெருஞ்சாயலரே."

என்னும் புறப்பாட்டு (262) இவ்வுண்டாட்டிற்கு உறுப்பாகச் செயற்குரிமரபின சிலவற்றைக் கூறிவிடுத்தது. ஆகையால் அது இத்துறைப் பொருளோடு ஒருபுடையொற்றுமையே உடையதாம். ஆயினும் அதனை இத்துறைப்பாற்சார்த்தினர் அதன் உரையாசிரியர். ஆகையாற் பிற செய்யுட்களும் இவ்வாறே யாதானுமோர் இயைபுபற்றி ஓரொருதுறைக்கு உரியவாக வழங்கப்பெறும் என்க.

இனி, இப்பாட்டில் "நிரையொடுவரூஉம் என்னை" என நிகழ் காலத்தாற்கூறினமையால், வருதலையே சிறப்புடையபொருளாகக் கொண்டு, அதற்கேற்ப இதனைத் தலைத்தோற்றம் என்றலும் ஒன்று. இங்ஙனமாக ஓர் இலக்கியமே பலதுறைகளுக்கு எடுத்துக்காட்டாதலும் இயலும். ஆகலினனே தமிழ்ப்பாடல்களைத் துறைப்பாற்படுப்பதில் ஆசிரியர்தமக்குட் கருத்துவேறுபாடு காணப்படுகின்றது. இஃது ஒரு புறம்நிற்க.

'கள்ளுண்டல் தீதெனச் சான்றோராற் கடியப்படுதலின், இத்துறையால் அதனைச் சிறப்பித்தல் வெறுப்பைத்தருவதொன்றும்; ஆகவே அது காவியச்சுவையிற் குற்றமுடைத்'தென்பார்க்கு, அற்றன்று: பெருங்காப்பியநிலை பேசுங்கால—"தேம்பிழி மதுக்களி" (தண்டி. 7.) எனப் பிறரும் காவியஇயல்களில் ஒன்றாக இதனை ஏற்றுக்கோடலானும், ஈண்டுக் கூறும் மறவாது குடிக்குரிய குன்றாவொழுக்கம் மட்டுண்வாழ்க்கையாகலானும், இழுக்கம் யாண்டையது? என விடுக்க.

அற்றேல், பெருங்காப்பியத்தின் இயலாக இதனைப் பேசிய காரணந்தான் என்னையோ? எனின், வெற்றிமேம்பாடும் செல்வச்செருக்கும் மக்களிடைவிளைக்கும் மனமகிழ்ச்சிக்கு அவர் கள்ளுங் காமமுந் துய்த்தல் அறிகுறியென்ப. பொருள்வளம்படைத்து நாகரிகமுற்றநாட்டினரிடத்துக் குடியுங் கூத்தும் நிகழ்வது இன்றைக்கும் கண்கூடாகக்கண்டதொன்றும். ஆகவே புகழ்பொருளின் வளமிகுதிகாட்டற்கு அளவு

கருவியாகக் கவிகளிற் புலவர்கள் இவற்றை மிகுதியும் புனைந்துரைத்திட்டாரென்க.

"தேம்பிழிமதுக்களி" என்றது கள்நுகர்தலையன்றிக் காமநுகர்தலைக் கூறிற்றில்லை யெனின், அதனைபடுத்துச் "சிறுவரைப்பெறுதல்" என்றமையால் அதற்கின்றியமையாத காமநுகர்ச்சி ஆண்டுக் குறிப்பாற் கொள்ளப்படும் என்பது. எனவே, உண்டாட்டென்பதற்குக் கள்ளுண்டு காமந்துய்த்தல் எனப் பொருள்கோடல் மிகப் பொருத்தமுடைத்தாயிற்று.

ஆயினும், பொதுவாகப் பிறகாவியங்களிற்கூறும் உண்டாட்டிற்கும் இங்குக் கூறிய உண்டாட்டிற்கும் சிறிது வேறுபாடுண்டு. முன்னது கற்போர்க்கு இன்பச்சுவை ஒன்றே தருவது. பின்னது இன்பத்தோடு வீரச்சுவையையும் கலந்து தோற்றுவிப்பது.

இன்னும், இத்துறை இவ்விடத்திற்கு ஏற்புடையதாதல் பின் வருமாற்றான் வலியுறுகின்றது. கரந்தையாரோடு போர்புரிந்தமைபாற் களைப்புற்ற வெட்சிவீரர் இளைப்பாறுதற்கு இவ்வுண்டாட்டு இன்றியமையாதது. "நறவுந்தொடுமின்" என்னுஞ்செய்யுளால் (புறம் 262) இதனை நன்கறியலாகும். 'நிரையுடனே வருகின்ற என் இறைவனுக்குப் பக்கமறவராய் நிரைகொண்டுவருவோர் அவன்றன்னினும் பெரிய இளைப்பையுடையர்; ஆதலால் அவர்க்கு மதுவையும் அலைத்துண்ணும்படி பிழிமின்; ஆட்டுவிடையையும் படுமின், என்னும் பொருள்பட ஆண்டுக்கூறப்பெற்றமை அறிந்துகொள்க. மதுவின்மலிவேயன்றிக் காதல்மடந்தையர் கட்கடைநோக்கமும் வெற்றிவீரர்க்கு விடாய்தணிக்கும் மருந்தாமென்பதை,

"வேந்துவினைமுடித்தவந்துவாள்வலத்தர்
யானைவெண்கோடுழத்தியமார்பும்
நீள்வேல்கிழித்தநெடும்புண் ஆகமும்
எய்கணைகிழித்தபகட்டெழில் அகலமும்
வைவாள்கிழித்தமணிப்பூண்மார்பமும்
மைம்மலருண்கண்மடந்தையரடங்காக்
கொம்மைவரிமுலைவெம்மைவேதுறீஇ
அகிலுணவிரித்த அம்மென்கூந்தல்
முகில்நுழைமதியத்துமுரிகருஞ்சிலைக்கீழ்
மகரக்கொடியோன்மலர்க்கணைதூரந்து

சிதாரிபரந்தசெழுங்கடைத்தூது
மருந்துமாயதிம்மாலை." (நடுகல். 10-21)

என்னும் சிலப்பதிகாரத்தான் அறியலாம்.

அன்றியும், பெற்றம்கொணர்ந்த கொற்றம்நினைந்து உள்ளடங்காத உவகை மீதூர்தலின் அதற்குப் போக்குவீடாகவும் மறவர் தாம் மது நுகர்தலுண்டு. இலங்கையிற் சீதாபிராட்டியைத் தேடிக் கண்டு மீண்ட வானரவீரர் தம் மகிழ்ச்சியின்மிகுதியால் மதுவனத்தை அழித்திட்டமை இதற்குச் சிறந்தசான்று.

"பண்டருகிளவியாள்தன்னைப்பாங்குறக்
கண்டனரன்னதோர்களிப்பினலவர்
வண்டுறைமதுவனமழித்துமாந்தியது
அண்டர்நாயகஇனிஅவலம்தீர்கெனு"ச்

சுக்கிரீவன்மொழிந்ததை (கம்பர். திருவடி 42) இனிது நோக்குக.

இவையேயன்றி, பகைவீரரோடு செருமலைந்த சினந்தணிதற்கு அருமருந்தாவது இக் காமக் களியாட்டயர்தலல்லது பிறிதில்லை யென்பது வெளிப்படை. இக்கருத்தேபற்றி இவ்வாசிரியர்,

"இளிகொண்டதீஞ்சொல்இளமாஎயிற்றி
களிகொண்டநோக்கம்கவற்றத்—தெளிகொண்ட
வெங்கள்மலியவிளிவதுகொல்வேற்றூர்மேற்
செங்கண்மறவர்சினம்"

என்றது காண்க.

இனி இவ்வாலாற்றுச்செய்யுளில் 'இளமா எயிற்றி' என ஒருமைப்பாலாற் கூறினரேனும், 'செங்கண் மறவர்' என்றதற்கேற்ப எயிற்றியர் எனப் பலர்பாலாகவே கொள்ளப்படும். 'நோக்கம் கவற்ற' எனவும், 'வெங்கள்மலிய' எனவும் கூறிய இடங்களிற் கவற்றவும், மலியவும் என உம்மைகள் விரித்துரைக்கத்தக்கன. தெளிகொண்ட வெங்கள் மலியவும், இளி கொண்டதீஞ் சொல் இளமா எயிற்றியர் களிகொண்ட நோக்கம் கவற்றவும், வேற்றூர்மேற் செங்கண்மறவர்சினம் விளிவது கொல் என மாறிக்கூட்டுக. கள்ளின்பின்னரே காமநுகர்ச்சிகூடுவதாகலின் இங்ஙன முரைக்கப்பட்டது.

'தெளிகொண்ட வெங்கள் மலிய' என்றது, மறவர்தாம் உட்கொண்ட கள் மலிவெய்தி மயக்கத்தால் அவரை மனமகிழச்செய்யவும் என்றவாறு. இது அவர் வேற்றூர்மேற்கொண்ட சினம் விளிதற்கு ஓர் ஏதுவாக வேண்டப்பட்டது. "தசும்புதுளங்கு" மாறு (பதிற்று. 42)

தகுதியாய் அடுதலுற்ற தேறல் என்பார் 'வெங்கள்' என்றார். கள் மலிதலாவது, அதனால் உண்டாம் களி அளவுமிக்கு அறிவினை யழித்தல்.

'இளிகொண்ட தீஞ்சொல்' என்றது, எயிற்றியர் தம் நோக்கத்தா னன்றி இனிய சொல்லானும் மறவரை மனங்கவற்றினமை குறிப்பித்த வாறு.

'இளமா எயிற்றி' என்றது, காமந்துய்ப்பார் விழைதற்குரிய இளமைமுதலிய எழினலங்கட்குக் கொள்கலமானவர் என எயிற் றியரைப் பாராட்டியவாறு.

'களிகொண்ட நோக்கம்' என்றது, எயிற்றியர் தாமும் முற்பட மது நுகர்ந்தமை குறிப்பித்தவாறு.

'நோக்கம் கவற்ற' என்றது, நெஞ்சத்தொளித்த காதற்குறிப்பைக் கடைக்கண்நோக்கம் வெளியிட்டு, அதனால் மறவரிடத்தினும் காதலை எழுப்பி மனங்கவலச்செய்பவும் என்றவாறு. கவலல், அவர் விரும்பி அளி செய்தல் வாய்க்குமோ வாயாதோ என்னும் ஐயுறவால் என்க. எனவே, எயினர் எயிற்றியரைத் தமக்கு உரியாராகப்பெறுதற்கு உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுப் பின்னிலைமுனியாது செய்த முயற்சிகளும், அதன்பிறகு அவருடன் கலவிகலந்துய்த்ததும் ஆகிய எல்லாம் குறிப் பாற் கொள்ளப்படும். வேற்றார்மேற் சினம்விளிதற்கு இது மற்றோர் ஏதுவாக வேண்டப்பட்டது.

'வேற்றார்மேற் செங்கண் மறவர் சினம் விளிவது கொல்' என்றது, இருவகை ஏதுவும் ஒருங்குசேர்தலாற் காந்தையார்மாட்டு வெட்சியா ருற்ற வெகுளி சிறிதே மாறுவதுபோலும்! என்றவாறு. எனவே, இரண்டும் சேராது இவற்றுள் ஒன்றேயுள்ளதுணையும் ஆறாதது என அவரது சீற்றத்தின் அருந்திறல் விளக்குவதாயிற்று. அல்லதூஉம், அவரது ஆறாதசீற்றமும் 'ஆறுமாறு மறவர்நிகழ்த்திய உண்டாட்டின் மலிவு இருந்தவாறென்னே! என அதனைக் கொண்டாடியதாகக் கோட லும் ஒன்று. கடுஞ்சினத்தாலும், கட்களியாலும், காமநுகர்வாலும் நிற மூண்ட கண் என்பார் 'செங்கண்' என்றார்.

இக் கூறியவற்றால் இச் செய்யுளில் வீரம், சிருங்காரம் ஆகிய இரு வகைச்சுவையும் இயைந்து தோன்றுதல் காணலாம். இது நிற்க.

[தொடரும்]

உ

நண்டும் வண்டும்.

உலகத்துள்ள பொருள்களெல்லாம் ஒன்றைபொன்று மாறுபட்டன வாய்த் திகழுமென்ப தொருதலை.

இனமென்றலும், ஒருவாற்றான் ஒத்தலும் ஒருவாற்றான் வேறுதலு முடைமைபற்றி யெழுந்த வழக்காகும். ஒப்புமைக்குணங்களும் தமக்குள் மாறுபாடு காட்டாமரபின அல்லவாகும்.

அங்ஙனமே உலகத்துட் பொருள்களுளடங்கும் நூல்களும் ஒன்றற்கொன்று மாறுபட்டனவாய்த் திகழுமென்பது ஒருதலையே.

ஒருநூல் மற்றொருநூலைச் சிலபகுதிகளி லொத்திருக்கலாம்; அன்றிப் பலபகுதிகளி லொத்திருக்கலாம். முழுவது மொத்திருத்தல் வேண்டுமென்னுங் கொள்கை எங்குங் காணப்பட்டிலது. அங்ஙனமாய நூல்களுங் காணப்பட்டில; ஆதலால், ஒரு நூல் சென்றபடியேதான் மற்றொருநூலுஞ் செல்லல்வேண்டுமென்னுங் கொள்கை வலியற்றதாகும். ஒவ்வாமையாகிய காரணத்தால் ஒருநூலும் குற்றமுடையதாகாது. ஒவ்வாப்பகுதிகளிற் பயனிலாமை காணின் குற்றங்கூறலாம். பயனுடைமைகாணிற் குற்றங்கூற லெங்ஙன மொல்லும்? வாளாவிருத்தல் நலனாமன்றே?

எந்நூலாயினுஞ் சரி, ஆயப்புகுங்கால் தங்கொள்கையாய தருப்பணத்தைத்தரித்துப் புகலாகாது. பொருளை யுள்ளவாறு விளக்கக்கூடிய நடுவுநிலைமையாகிய தருப்பணத்தை நன்றாய்த் தரித்துப் புகல் அழகாகும். பிணக்கன் சினத்தனாய்நின்று நூலாய்தல் பயனற்றதாகும் அதனாலவையொழித்து ஆயுமுன் அந்நூல் தன்னாற் பலகாற் பயிலப் படவேண்டும். ஆயுங்கால் அந்நூலிடைத்தோன்றும் ஐயந்திரிபுகளைக் கற்றோர் பலரிடை உசாவியகற்றித் தெளிதல்வேண்டும். புலவர்ஒருவர்பாற் கேட்க அவர்க்குத் தெரியாமையால் எவர்க்குந் தெரியாதென்றாவது, ஒருவர்கூறிவிட்டமையால் இதுவே சரியென்றாவது அமைதலாகாது.

இங்ஙனமே யின்னும் நூலாராய்ச்சிக்கு வேண்டும் குணங்களி னடைவும் குற்றங்களினொழிவும் உடையராகி விரும்பிய நூலை யாராய்ந்து வெளிப்படுப்பின் உலகிற் குபகாரமாகுமென்ப தொருதலை.

சில வாய்க்கப்பெற்றமையானே வரையிகந்து ஆயப்புகுந்து நூலிற்குப் பழுதுண்டாக்கலல்லாமலும் உலகிற்கும் பழுதுண்டாக்கு கின்றனர் இக்காலத்துச் சிலர்.

அன்னாரி லொருவர் சின்னாளின்முன்னர் எழுதிய கட்டுரையிற் காணும் பொருந்தாவிடயம்பலவற்று ளொன்றுபற்றி யெழுத லுற்பட்டனன்.

அஃது நண்டும் வண்டும் பற்றியதேயாகும்.

எதனையும் பிறரறியத் தக்க காரணங்காட்டி நிறுவின் நன்றே. பொருந்தாக்காரணங்கொண்டு திருந்தாக்குற்றங்கூறின் அன்றே.

ஆசிரியர் தொல்காப்பியனார்,

"ஒன்றறிவதுவேயுற்றறிவதுவே
இரண்டறிவதுவேயதனொடுநாவே
மூன்றறிவதுவேயவற்றொடுமூக்கே
நான்கறிவதுவேயவற்றொடுகண்ணே
ஐந்தறிவதுவேயவற்றொடுசெவியே
ஆறறிவதுவேயவற்றொடுமனனே
நேரிதினுணர்ந்தோர்நெறிப்படுத்தினரே" எனவும்,

"புல்லுமரனுமோரறிவினவே
பிறவுமுளவேயக்கிளைப்பிறப்பே"

"நந்துமுரளுமீரறிவினவே
பிறவுமுளவேயக்கிளைப்பிறப்பே"

"சிதலுமெறும்புமூவறிவினவே
பிறவுமுளவேயக்கிளைப்பிறப்பே"

"நண்டுந்தும்பியுநான்கறிவினவே
பிறவுமுளவேயக்கிளைப்பிறப்பே"

"மாவுமாக்களுமையறிவினவே
பிறவுமுளவேயக்கிளைப்பிறப்பே"

"மக்கள்தாமேயாறறிவுயிரே
பிறவுமுளவேயக்கிளைப்பிறப்பே"

எனவும் மரபியலிற் கூறியுள்ளார். நன்னூலார்,

"புன்மரமுதலவுற்றறியுமோரறிவுயிர்"
"முரணந்தாதிகாவறிவொடீரறிவுயிர்"
"சிதலெறும்பாதிமூக்கறிவின்மூவறிவுயிர்"
"தும்பிவண்டாதிகண்ணறிவினாலறிவுயிர்"
"வானவர்மக்கணரகர்விலங்குபுள்
ஆதிசெவியறிவோடையறிவுயிரே"

என உரியியலிற் கூறியுள்ளார்.

இவ்விருவர் சூத்திரங்களையும் நோக்குங்கால் நன்னூலார் தொல்காப்பியனாரைப் பின்பற்றியே சூத்திரஞ்செய்துள்ளார் என எவரும் அறிவர். ஆனால் மக்கட் கையறிவுகூறியதொன்றுமே முரண்பாடாகும் எனக் கூறலாம். அஃது முரண்பாடன்றென்பதை முன் 'செந்தமிழில்' வெளிவந்துள்ள மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலைத் தலைமையாசிரியரவர்களது கட்டுரையா லறியலாம்.

நாலறிவுயிரிவையென்னுமிடத்துத் தொல்காப்பியனார், 'நண்டுந் தும்பியும்' என்று கூறியிருக்க, நன்னூலார் நண்டை நீத்து 'வண்டுத் தும்பியும்' என்று கூறியது பொருந்தாக்கூற்றென்றார் ஒருவர். அவர் கூற்றுட் சில பின்வருமாறு:—

"ஓரம்போகியார் முதலிய சங்கச்சான்றோர்போல நன்னூலார் பொருள்களை (நண்டு முதலியவற்றை) நேரிற் கண்ணுற்றவற்றின் றன்மைகளை யறியும்தகைமையற்றவராதலின், நண்டுக்கு மூக்குண்டோ இல்லையோ வென ஐயங்கொண்டு நண்டைநீத்து வண்டைக்கூறினர். நாங்கள் அச்சங்கச்சான்றோர்போல நண்டை நேரிற்கண்டு அதற்கு மூக்குண்மை தெரிந்தனம்" எனக் கூறுகின்றனர்.

தமக்குள்ள ஆற்றலும் சங்கத்தார்க்குரிய தலைமையும் நன்னூலார்க் கில்லையென்ப திருக்குக. நண்டிற்கு மூக்கில்லையோ உண்டோ வென்னும் ஐயம் அதனை நேரிற் காணுதார்க் கெங்ஙனந் தோன்றும் ?

கண்பெற்ற வுயிர்க்கு மூக்கும் நாவும் ஊறும் உளவாம் என்ப தறியுமாறு 'நான்கறி வதுவே யவற்றெடு கண்ணே' எனத் தொல்காப் பியனூர் கூறியதையறிந்து தெளிந்து தாமு மங்ஙனமே கூறிய நன்னூ லார்க்குக் கண்ணே வெளிப்படையாகக் கொண்டுள்ள நண்டினிடத்து மூக்கில்லை யென்னுங் கொள்கை யெங்ஙனந் தோன்றும். ஐயமுந் திரிபும் அணுகுதற் கேது இறையும் அவர்க் கின்ருக ஐயமும் திரிபுங் கொண் டகற்றினர் எனக் கூற லறியாமைச்செயலாகும்.

பொருள்களைச் சோதித்தலில் வல்லவரெனச் சங்கச்சான்றோரைப் புகழ்ந்து கூறியார்க்கு அவர் நண்டின்மூக்கைப்பற்றி யோரிடத்தும் கூறுதுசென்றமை தோன்றவில்லைப்போலும்; தோன்றின் அவரைப் புகழ்தற் கெதிர்மறையாவ ரன்றே ?

வண்டு மூவறிவினதாக அன்றி ஈரறிவினதாக இருப்பின் அதனை நான்கறிவினதென்றல் மலைவாகி மாசுறும். நான்கறிவினதாகிய அதனை நான்கறிவினதென்றல் மாசுறுமா? வண்டு நான்கறிவினதென்பதைப் பேராசிரிய ருரையானுந் தெளிக.

"நண்டிற்கு மூக்குண்டோவெனின், அஃ தாசிரியன் கூறலான் உண்டென்பது பெற்றும்" எனப் பேராசிரியர் கூறினமையால் நன்னூ லாரும் ஐயங்கொண்டு நீத்தனர் என்றல் பற்றுக்கோடில்லாப் பறைவாகு மெனக.

நன்னூலார்க்கு, நண்டும் வண்டு நாலறிவின வென்னுங் கொள்கை யுளதாயின் தொல்காப்பியனூர் கூறியதுபோல நண்டையே தும்பியோடு கூறலாமன்றே ? வண்டைக்கூறியதென்னை ? எனின், நன்றுகூறினுய் ! தொல்காப்பியனூர் முன்னெல்லாம் ஓரினமாய பொருள்களையே 'புல்லு மானும்' "நந்து முரளும்," "சிதலு மெறும்பும்" எனச் சேர்த்துக் கூறி யதுபோல நீர்வாழ்வனவாகிய நண்டைநீத்துத் தும்பியோ டோரினமாய வண்டைச் சேர்த்துக் கூறினுரன்றி வேறின்றெனக.

சங்கச்சான்றோரும்,

"திருந்திழாய்காதலர் தீர்குவரல்லர்
குருந்தின் குவியிணருள்ளுறையாகத்
திருந்தினிளிவண்டுபாட விருந்தும்பி
யின்குழலூதும்பொழுது" (கார்நாற்பது) எனவும்,

"குழலிசை தும்பிகொளுத்திக்காட்ட
மழலைவண்டினநல்லியாழ்செய்ய"

"கொம்பர்த்தும்பி குழலிசைகாட்டப்
பொங்கர்வண்டினநல்லியாழ்செய்ய" (மணிமேகலை) எனவும்,

வண்டையும் தும்பியையும் சேர்த்துக் கூறுதல் காண்க. இவ்வாறே,

அரக்கெறிகுமுதச்செவ்வாயலர்முலைபங்கலார்தம்
திருக்கிளர்கமலம்பூத்தசேயரிக்கண்ணும்வாவி
உருக்கிளர்குவளைப்போதும்வேற்றுமையுணராதுற்ற
வரிச்சிறைத்தும்பியோடுவண்டினமருளுமாதோ"

(நைடத. நாட்டுப் படலம்)

எனப் பிற்காலத்தார் கூறுவதுங் காண்க.

"மங்கைநல்லவர்கண்ணுமனமும்போன்
றெங்குமோடியிடறுஞ்சுரும்புகாள்
வண்டுகாள்மகிழ்தேனினங்காள்மது
வுண்டுதேக்கிடுமொண்மிஞிற்றீட்டங்காள்."

"சோலைமஞ்ஞைசுரமைதன்சுண்ணமும்
மாலையென்னுமடமயில்சுண்ணமும்
சாலநல்லனதம்முளுமிக்கன
கோலமாகக்கொண்டுண்மினெனச்சொனான்"

என்னுஞ் சீவகசிந்தாமணிப்பாக்களி னுரையில் ஆசிரியர் நச்சினார்க்கினியர் "'தாதுண் தும்பி போதுமுரன்றாங்கு' என்றும், 'இரங்கிசை மிஞிறொடு தும்பி தாதூத' என்றுங் கூறுதலின் தும்பியது கிளையா மிந் நான்கு மென்க" என எழுதியிருத்தலையும் நோக்குக.

நண்டும் தும்பியும் அறிவாலோரினமாகுமன்றி வேறுவகையி லின்றென்க. இனி,

"வானவர்மக்கள்நரகர்விலங்குபுள்
ஆதிசெவியறிவோடையறிவுயிரே"

என்பதில் ஆதி யென்பதனால் நரகர் தேவரடங்கவும் அவரையும் உடன் கூறியது உயர்திணையாமென்று தானாட்டித் தனாது நிறுத்தல் என்னு மதம்பற்றியென்க.

அற்றேல் விலங்கெனவே புள்ளுமடங்குமல்லவா? அதனைப் பிரித்து வேறு ஓதிய தெற்றிற்கு எனின், வண்டும் தும்பியும் புள்ளினு மடங்குமாதலின் "தும்பிவண்டாதிகண்ணறிவினாலறிவுயிர்" எனவே ஆதியென்றதனால், புள்ளெலாமடங்குமெனவுங் கொண்டு, தும்பி வண்டிவற்றிற்குள வறிவே மற்றையவற்றிற்குமுளவெனவு முணரப்படுமன்றே; அது நீக்குதற்பொருட்டு வேறோதினாரென்க. இஃது தொல்காப்பியம் கடின நூலாய்த் தோன்றுங்காலத்துச் செய்யப்பட்டதாகலின் நுண்ணுணர்வோரன்றி ஏனையோருமுணர இங்ஙனங் கூறலேயமையும். நுண்ணுணர்வோரால் மாவெனக்கூறவே புள்ளு முணரப்படும். மக்களினிழிந்த மாக்களையும் விலங்கினுயர்ந்தவற்றையும் ஆதியென்பதனா லடக்கினாரென்க. அன்றி,

"தக்கவின்னதகாதனவின்னவென்
றொக்கவுன்னலராயினுயர்ந்துள
மக்களும்விலங்கே"

எனக் கல்வியிற்சிறந்தார் கூறியபடி மக்களினிழிந்த மாக்களை விலங்கு எனவே யடங்கவும் விலங்கினுயர்ந்தவற்றை வானவரெனவே யடங்கவும் கூறிச்சென்றனரெனினும் ஆம்.

வானவரைத் "தெய்வஞ்சுட்டிய பெயர்நிலைக்கிளவியும்—இவ்வெண வறியும் அந்தந்தமக்கிலவே, உயர்திணைமருங்கிற் பால்பிரிந்திசைக்கும்" எனத் தொல்காப்பியனார் உயர்திணையிலடக்கினாராதலான் நன்னூலார், வானவரை உயர்திணையெனப் புதிதாக நாட்டினர் எனக் கூற லெங்ஙனமமையும் எனின், அவர் தெய்வஞ்சுட்டிய பெயர்நிலைக்கிளவியை உயர்

திணைக்கிளவியுளடக்கினாரன்றித் தெய்வத்தை யுயர்திணையுளடக்கினா ரல்லரென்க. அடக்கினராமெனின் இங்கும் 'மக்கடாமே யாறறிவுயிரே' என்னாது 'மக்களுந் தேவரு மாற்றிவுயிரே' என விளங்கச் சூத்திரம் செய்திருப்பரென்க. பிறவென்றதனால் அடக்கினாரெனின் அஃது பெட்புறும் கூற்றாகாதென்க.

"முரணந்தாதி நாவறிவோ டீரறிவுயிர்" எனக் கூறியிருத்தலின் மீன்முதலியன ஆதியென்பதனா லடக்கப்பட்டு அவையும் ஈரறிவின வெனக் கூறப்பட்டன என்று கொள்ளநேருமன்றோ வெனின் அவற்றின், கண்முதலிய பொறிகள் கண்ணுறப்படுதலின் நான்கறிவினவும் ஐயறி வினவும் இவையெனக் கூறியசூத்திரங்களி லாதியென்பதனா லடங்கக் கூறினாரென்க. பறப்பனவற்றுள் ஒருசாரனவற்றிற்கன்றி ஏனையவற் றிற்கெல்லா மையறிவுண்மையின், புள்ளெனவே பெரும்பான்மையன அடங்கும். நீர்வாழ்வன, ஈரறிவினவும் மூவறிவினவும் நாலறிவினவும் ஐயறிவினவுமாயிருத்தலின் அவற்றை, வண்டுமுதலியவல்லாத மற்றைய வற்றைப் புள்ளென அடக்கிக்கூறினாற்போலக் கூறவியலாதென்க.

இனி, தும்பி ஐயறிவினதாதலினானும் வண்டும் அங்ஙனமே ஐயறி வினதாகலினானும் தும்பியைக்கூறவே அதனினமாய வண்டும் அடங் கும்; ஆகையான் நாலறிவினதாகிய நண்டை முன்னும் ஐயறிவினதாகிய தும்பியைப் பின்னும் கூறினார்; இக்கருத்தை நச்சினார்க்கினியரும் முன் கூறிய சிந்தாமணிக்கவியுரையிலேயே "'நண்டுந் தும்பியும் நான்கறி வினவே-பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே', என்று தும்பிக்குச் செவி யின்றெனவே இவற்றிற்கும் செவியின்றாமாதலாலே வருத்தமிகுதியான் இவற்றைநோக்கி வாளாகூறியதன்றி வேறின்று; இவை ஈண்டுவந்து கரிபோதலில; கேள்வியில்லன வருதல் என்னை? என்பது கடா; அதற்கு விடை, ஆசிரியர் 'நண்டும் தும்பியும்' என்று தும்பியைப் பின்வைத்தது மேல்வருஞ்சூத்திரத்தின் 'மாவு மாக்களு மையறி வினவே' என்ற ஐயறிவு இதற்கு மேறுதற்கென் றுணர்க. இதனை வாராததனால் வந்ததுமுடித்தல் என்னும் தந்திரவுத்தியாற்கொள்க வென்று ஆண் டுரைகூறிப்போந்தாம்; அதுவே யாசிரியர்கருத்தென்பது சான்றோ ருணர்ந்தன்றே 'பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த—தாதுண் பறவை பேதுற லஞ்சி—மணிநா யாத்த மாண்வினைத்தேர்ன்" என்று

அப்பொருடோன்றக் கூறியதென் றுணர்க. இக்கருத்தா னிவரும் செவியுணர்வுண்டென்று கூறினர்." எனவும், "இங்ஙனம் கூறாது தான் கற்ற விஞ்சையினுணையாற் கேள்வியுணர்வுபிறப்பித்தானெனின், அவை கரிபோதலாகாவாம்; 'எண்ணி னின்சொ லிகந்தறி வாரிலை' என்றலின்" எனவும் கூறி விளக்கியுள்ளார். ஆதலின் வண்டைக் கூறாது நண்டைக் கூறுதலே நலனுமன்றி வண்டைக்கூறுதல் பயனின்று. தும்பியை முற்கூறலும் குற்றமாம் எனின், தும்பி, ஐயறிவினதென்பதற்குத்தான் தொல்காப்பியர் நண்டிற்குப்பின்னிறுத்திக்கூறினர் எனின் மரம், ஈரறிவினதென்பதற்கும் எறும்பு மூவிறிவின தென்பதற்கும் முரள் நாலறிவினதென்பதற்குமா முறையே புல் சிதல் நந்து ஆகிய இவற்றின் பின் னிறுத்தனர்? தும்பியும் வண்டும் ஐயறிவினதாயின் தும்பிமுதலியன மாவென்னும் பொதுச்சொல்லிற்கு மிலக்கியமாதலின், மாவு மாக்களும் ஐயறி வினவே' எனக் கூறியதனாலேயே யடங்கிவிடும்; தும்பி வண்டினுட் சிலவற்றிற்குத்தான் ஐயறிவுண்டெனின் அவை, பிறவு முளவே யக்கிளைப்பிறப்பே' என்பதனுளடங்கிவிடும். அங்ஙனமாக வேறு கூறியதனாற் பயனென்னை? வேறுகூறினும் ஐயறிவுடையனவற்றோடு விளங்கக்கூறாது நாலறிவுடையதனொடு சேர்த்து மயங்கக்கூறல் ஆசிரியர் செயலாமா? தும்பியைப் பிற்கூறியவகையானே அதற் கையறிவுண்டு என்பதைக் குறிப்பித்தாரெனின் 'வந்ததனால்வாராதது முடித்தல்' என்னுந் தந்திரவுத்தியாற் கொண்டதெதனை? ஈண்டு வந்ததெது? வாராததெது? என்பனவாதிய வினாக்களுக்கு விடையிறுக்கவொண்ணாதாகலான் ஐயறிவு என்பதற்கோ அன்றி ஐயறிவு எறுதற்கோ தும்பியைப் பின்னிறுத்தினாரல்லர், நாலறிவினதென்பதற்கே நிறுத்தினர்; ஆதலின் ஒரினமாய வண்டைக்கூறுதலினாலும் சிறந்தபயனுண்டெனக்கொள்க.

ஆயின், தேவரும் சங்கச்சான்றோரும் தும்பிக்கும் அதனினமாய வண்டிற்கும் செவியறிவுண்டெனக் கூறியுளரே; அது பொருந்துமா றெங்ஙனமெனின்? அச்சிந்தாமணிக் கவியுரையிலேயே "எறும்பு முதலிய கூறும் பாஷையைச் சீவக னுணர்ந்திருத்தலின் அதனால் அவற்றை யழைத்தான் என்றுணர்க. விக்கிரமாதித்தன் எறும்பின்பாஷையை யறிந்தானென்று கதை கூறுகின்றமையின்." என நச்சினார்க்கினியரே யெழுதியிருக்கின்றார். ஆதலின் எறும்பிற்கும் செவியறிவுண்டென ஒப்பினாராயிற்று.

இக்காலத்துச் சில நூதன நுண்ணிய ஆராய்ச்சியாளர் ஒருமாத்தருகே ஒருவன் அரிவாள்கொண்டோங்கினால் அம்மரம் அச்செயலைக் கண்டு உடனடுங்குகின்றது என்பதைக் கருவிமூலம் அறிவிக்கின்றனர் என்பது உலகறிந்ததொன்றாம். அம்மரம் கண்ணறிவுபெறாதுபோனால் அரிவாள்கொண்டோங்குவதைக் கண்டு நடுங்குத லெங்ஙனங்கூடும். ஆகவே மாத்திற்குங் கண்ணுண்டு எனப் புலப்படுகின்றது.

இங்ஙனமே எல்லாவறிவும் எல்லாவுயிர்க்கும் உளவென நுணித்து நோக்குவார்க்குப் புலனாம். அங்ஙனமாகவும் "புள்மாமுதல வுற்றறியு மோரறிவுயிர்" என்பது முதலாக வுயிர்கட்கு அறிவு வரையறைசெய்தது பிரதானவகையாலேயாம் எனக் கொள்ளல் சாலுமென வுன்னுகின்றனன். இங்ஙனங் கொள்ளின் தேவர்கூற்றும் சங்கச்சான்றோர்கூற்றும் பழுதுறாவென்க.

புல்லும் மாமு முதலியன ஓரறிவையே பிரதானமாகக் கொண்டன. நந்தும் முரளும் முதலியன ஈரறிவையே பிரதானமாகக்கொண்டன. சிதலும் எறும்பும் முதலியன மூவறிவையே பிரதானமாகக்கொண்டன. தும்பியும் வண்டும் முதலியன நான்கறிவையே பிரதானமாகக்கொண்டன. மாவும் புள்ளும் மக்களும் தேவரும் நரகரும் முதலியன ஐயறிவையும் பிரதானமாக்கொண்டன. மக்கள் முதலிய வுயிர்கள் "தக்க இன்ன தகாதன இன்னவென்றுணரும்" உணர்வையும் பிரதானமாகக் கொண்டனவே. என அறிக. மற்றவை மற்றவைகட்கு அப்பிரதானமேயன்றி இலவெனலாகாவென்க.

இதனாலன்றோ தொல்காப்பியனாரும் உயிர்கட்கு அறிவுவரையறை செய்யுஞ் சூத்திரத்திறுதியில் "நேரிதினுணர்ந்தோர் நெறிப்படுத்தினரே" எனக் கூறிப் பிரதானமென்பதை ஞாபகப்படுத்திச் சென்றுள்ளார் என்க. இனி;

"கள்வனேகுளிரகள்ளிகவைத்தாள்கற்கடகம்ஞெண்டே" எனவும்

"கள்வனலவன் நள்ளிகற்கடகம்
குளிரேகவைத்தாண் ஞெண்டின்கூற்றே"

எனவும், முறையே சூடாமணி பிங்கலநிகண்டுகளில் ஞெண்டிற்குப் பெயரிவையெனக்கூறுமிடத்து நண்டென்னும் பெயர் வாராமையானும், ஞெண்டெனவே காணப்படுதலானும், மற்றைய நூல்களினும் நண்டு பயில்வுடையதன்றாகலானும் அங்ஙனம் வந்த நண்டும் ஞெண்டின் திரிபெனக்கொள்ளலாமாகலானும் இங்ஙன் பயில்வின்றியும் திரிந்தும் வரும் நண்டென்னுஞ்சொல்லைத் தும்பிக்குமுன்னிறுத்தினர் தொல்காப்பியர் எனக் கொள்ளல் சாலாதென்னலாம்.

ஆதலான் அவரும் "வண்டும் தும்பியும்" எனவே சூத்திரம் செய்திருப்பரென எண்ணுகின்றனன். நண்டைக்கூறுதலிலே தொல்காப்பியர்க்கு நோக்குளதெனினும் *"ஞெண்டும் வண்டு நாலறிவினவே" எனவே சூத்திரம் செய்திருப்பர்; வண்டெனவே தும்பியு மடங்குமாதலி னென்க.

இதுவரை கூறியவாற்றான் "வண்டும் தும்பியும்" என்று நன்னூலார் கூறியது தொல்காப்பியர்க்கு மாறுபட்டகொள்கையன்றென்பதும் குற்றமுடையதன்றென்பதும் வெளிப்படல் கண்டு தெளிக.

இங்ஙனம்,

பண்டித. சித. நாராயணசாமி,

அறுபத்துமூவர்மடம், திருவையாறு.

---

*"நண்டும் வண்டும் நாலறிவினவே" எனக் கூறினர் எனினுமாம்.

'மணவாளன்' அல்லது பிடிவாதம்.

ஓர் ஒற்றை அங்க ஹாஸ்ய நாடகம்.

[கே. ஸி. வீராகவையர், எம்.ஏ., எல்.டி., சென்னை.]

(சஅ-ம் பக்கத் தொடர்ச்சி.)

காட்சி. IV.

(அதே அறை. போகி வருகிறன்.)

போகி:- அம்மா! உங்களது பெற்றோர்கள் வருகிறார்கள்.

(பரிமாறுவதற்காக மேஜையின்பின்னே நிற்கிறான்).

மண:-(ஏதோ அவசரமாகக் கவலையுடன் நாராயணியின் காதில் முறையிடுகிறான்) கண்ணே! உன் கண்களை நன்றாய்த் துடைத்துக் கொள். இப்படியிருந்தால் அவர்கள் சந்தேகப்படுவார்கள்.

நாரா:-(தன் கண்களைத் துடைத்துக்கொண்டு) நமது விஷயத்தை அவர்களிடம் சொல்வதில் எனக்கு ஆக்ஷேபனையேயில்லை. என் மட்டி லும் நான் குற்றமற்றவளே.

மண:—என் குடும்ப எஜமானியாகப் பாவித்து உனது கடமை களைச் சிறிது சிந்தனைசெய். விருந்து வருங்காலத்தில் முகமலர்ச்சி யுடன் இருக்கவேண்டும். (தனது மாமன் மாமியை எதிர்கொண்டு அழைக்கச்செல்லுகின்றான்.)

நாரா:-(தன் கண்களைச் சீர்படுத்திக்கொண்டு தானும் தன் பெற் றோர்களை வரவேற்கச் செல்லுகிறாள். இருவரும் நமஸ்காரம் செய் கிறார்கள்).

முருகன்:—குழந்தைகளே! ஆசீர்வாதம். சகலசௌபாக்கியங்களையும் கடவுள் உங்களுக்குக் கொடுப்பாராக!! சௌக்கியமாயிருக்கிறீர்களா?

மண:—(முருகனது கழி சஞ்சி முதலியவைகளை வாங்கி மேஜையின் மேல் வைக்கிறான்) வாருங்கள்! உட்காருங்கள்.

நாரா:—தாயே! தந்தையே! வாருங்கள், உடம்பு சுகமா?

வள்ளி:—குழந்தையே! உன்னைப் பார்த்து வெகுநாளாயிற்று. நீ அடிக்கடி வந்து எங்களைப் பார்க்கிறதில்லை.

நாரா:—என்ன, அம்மா!

வள்ளி:—அப்படித்தான், எனக்குத்தெரியும். புக்ககத்துக்கு வந்துவிட்டால், பெண்களுக்குத் தம் தாயாரைப்பற்றி நினைக்கச் சாவகாசம் இராது; அது எனக்குத் தெரியும்.

முருகன்:—(சிரித்து, விளையாட்டாய்) அதுதானே உலகசுபாவம், வள்ளி! ஆனால் நமது குழந்தை அப்படிப்பட்டவளல்ல. எங்களைப் பற்றி நடுவேநடுவே நினைக்கிறாயல்லவா?

நாரா:—நடுவேநடுவேயா? எப்பொழுதும் உங்கள் ஞாபகம் மறப்பதில்லை, அப்பா!

மண:—(கலங்கினவனாய்த் தன்னைப் பார்க்காமல் பேசும் தனது சகியை உற்றுப்பார்த்துக்கொண்டே) நாமெல்லோரும் இந்த நாற்காலிகளில் உட்காருவோமே.

முருகன்:—அதற்கு என்ன தடை! ரயில் ஸ்டேஷனிலிருந்து வழி நடந்து களைத்த கால்களுடனும் பசிக்கும் வயிற்றுடனும் வந்திருக்கிறேன். உன்வீடு வெகுதூரத்திலுள்ளது. (மேஜையின்முன் வலதுபுறமாக உட்காருகிறான்).

மண:—(இடதுபுறமுள்ள நாற்காலியில் உட்காரும்படி தனது மனைவிக்கு ஜாடைகாட்டிவிட்டு முருகனது நாற்காலிக்குப் பின்புறமாக மணவாளன் நிற்கிறான்).

நாரா:—(வேணுமென்று தன் பெற்றோர்கள் மத்தியிலுள்ள நாற்காலியில் உட்காருகிறாள்.)

தாயி:—(மேஜையின்மேல் ஒரு ஏனத்தை வைத்துவிட்டுச் செல்லுகிறாள்)

போகி:—(அவளை யிழுத்து ஒருதரம் அந்தவார்த்தைகளைச் சொல்ல மாட்டாயா என்று ஜாடையாகக் கேட்கிறான்).

தாயி:— (கையை உதறித்தள்ளிப் பிரிந்துபோகிறாள்)

முருகன்:—(நிதானமாகச் செம்பிலிருந்து காபியை ஒரு கிளாஸில் ஊற்றி) அடி! இதென்ன, இளம் தம்பதிகளுக்கு நடுவே உட்கார்ந்து விட்டாய். நல்லயோஜனை செய்தாய். அப்படியானால்தான் விருந்தினர்களை நன்கு கவனிப்பார்கள். இல்லையா? எல்லாரும் காபியை ஊற்றிக் கொள்ளுங்கள். இப்படிப்பட்ட சுதினங்கள் நமது மகளுக்கும் மருமகனுக்கும் என்றும் கிட்டுவதாக!!

மண:—(காபியைஊற்றி, கிளாசைக் கையிலெடுக்கும்போது திகைக்கிறான்).

நாரா:—(எடுத்த கிளாசை மேஜையின்மேல் வைக்கிறாள். கண்ணீர்த் திவலை ஒன்று விழுகிறது. அதைத் துடைக்கிறாள்).

முருகன்:—இதென்ன ஆச்சரியம்? நீங்கள் இவ்வளவு திகைக்கிறீர்கள்? மருமகனே! உன்மனம் கலங்கினாற்போலத் தோன்றுகிறது. அதோ, அவளது கண்ணில் ஜலம் ததும்புகிறது. (சிரித்துக்கொண்டு) ஏதாவது பிரணயகலகம் நடந்ததோ?

மண:—(ஜாடைகாட்டிப் போகியை வெளியேபோகச்சொல்லுகிறான்; அவனும் போகிறான்.)

வள்ளி:—பட்டவர்த்தனமாய், அதென்ன, அப்படிக்கேட்டீர்களே? குழந்தைகள், அவர்கள் காரியம் அவர்களுக்குத் தெரியாதா?

மண:—ஒரு சிறுவேடிக்கை; அற்பவிஷயம். சொல்லும்படியாய் ஒன்றுமில்லை. என் மனைவிக்குக் கொஞ்சம் முற்கோபம் ஏற்பட்டுவிடுகிறது, அவ்வளவுதான்.

நாரா:—அதுவுங்கூடவா? (விம்மி அழுகிறாள்). என்மேல் முற்கோபக் குற்றம் ஒன்று சாட்டுகிறீர்களா?

மண:—நமது தாய்தந்தையர்கள்முன்புகூடவா இந்தமாதிரி—

வள்ளி:—அழாதே; குழந்தை! இந்தமாதிரிநடப்பது சகஜந்தான். பொறுமையுடனிரு.

நாரா:—என் மனவருத்தத்தை என்னால் அடக்கமுடியவில்லை என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். நான் எவ்வளவோ அடக்கிப்பார்த்தும் முடியவில்லை — அவ்வளவு வருத்தம் ஏற்பட்டுவிட்டது.

வள்ளி:—(தன்பெண்ணுக்காகப் பரிந்து) மணவாளரே! குழந்தை வருந்தும்படி என்னசெய்தீரோ?

முருகன்:—சீச்சீ, நீ அதில் தலையிடாதே. அவர்கள் ஊடலை அவர்களே தீர்த்துக்கொள்ளவேண்டும்.

மண:—(ஆத்திரத்துடன்) நாராயணிசொல்வதைப் பார்த்தால் நான் ஏதோ ஒருவரும் எண்ணாதவண்ணம் அவளைத் துன்புறுத்திக் கஷ்டப்படுத்தியதுபோல் விளங்குகிறது. நடந்தவிஷயத்தைச் சொல்லிவிடுகிறேன்; பிறகு நீங்களே யார்சரி, யார்தப்பு என்பதை நிதானியுங்கள்.

முருகன்:—அதைப்பற்றிச் சிந்திக்காதே. உங்களது குடும்பக்கலகங்களில் நாங்கள் தலையிடுவதாயில்லை (உண்டியை அருந்துகிறார், காபியைக் குடிக்கிறார்).

மண:—குற்றம் என்பக்கம் இல்லை என்பதை நான் உங்களுக்கு ரூபிக்கவேண்டும்.

முருகன்:—அது அவசியமேயில்லை.

மண:—நீங்கள் ஒருவேளை நினைக்கலாம்.

முருகன்:—நாங்கள் ஒருபோதும் ஒன்றும் நினைக்கவில்லை, (மேலும் சாப்பிடுகிறான்).

வள்ளி:—கொஞ்சம் பொறுங்கள். ஒருவேளை சமாதானம் ஏற்படலாம். மணவாளரே! தயவுசெய்து சொல்லும்.

மண:—இன்று காலை எங்கள்வீட்டுப் போகி, வேலைக்காரி தாயியைப் பார்த்துக் "கடவுள்கிருபை, வேலைமுடிந்தது" என்று சொல்லும்படி தர்க்கித்தான். அவள் மறுத்துவிட்டாள். பிறகு அது பெரிய சண்டையாயிற்று. இந்த விஷயத்தை நான் ஒற்றுக்கேட்டேன். இந்தமாதிரி நடந்தது என்று பிறகு என்மனைவியிடம் வேடிக்கையாகச்சொன்னேன். அதோடு அவள் அந்தமாதிரி பிடிவாதமாய் என்னிடம் இருக்கமாட்டாள் என்று ஹாஸ்யமாய்ச்சொன்னேன், அந்தவார்த்தைகளை ஒருதரம் தயைசெய்துசொல்லும்படி அவளைப் பின்னர் வேண்டினேன். ஒன்றுக்கும் மசியாமல் ஒரேமுரண்டாய் அவளும் இருக்கநேரிட்டதிலிருந்து எங்கள் இருவருக்கும் கொஞ்சம் கடுஞ்சொற்கள் பிரயோகமாயின.

நாரா:—நீங்களும் சாக்ஷிகள்! அவர் சொல்லுகிறமொழிகளைக் கேளுங்கள். பிடிவாதம், முரண்டு, முற்கோபம் இன்னும் என்ன தோஷங்கள் உண்டு, சொல்லுங்கள். நான் முரண்டுசெய்து இருக்கமாட்டேன் என்று உங்களுக்கு ருசுவாகவில்லையா?

முருகன்:—(பரிகாசப் பெருமூச்சுவிட்டு) சரி, சரி, குழந்தைகளே!

வள்ளி:—(கண்டிப்பாய் முருகனைப்பார்த்து) நீங்கள் நமது பெண்ணை நன்றாய் அறியவில்லை. அவள் ஒருபொழுதும் முரண்டு அடித்ததில்லை. குழந்தை! பயப்படாதே, சாந்தப்படுத்திக்கொள்; பையப்பைய உங்கள் ஊடலும் தெளியும், நீங்களும் சமரசப்படுவீர்கள்.

நாரா:—அதோ பார், அம்மா! நான் அந்த வார்த்தைகளைச் சொல்ல வேண்டுமென்று இன்னும் வற்புறுத்துகிறார்.

வள்ளி:—மருமகனே! இன்னும் வற்புறுத்துகிறீரா, என்ன?

மண:—(கஷ்டப்பட்டுக்கொண்டு) அதை மறந்துவிட்டு வேறுவிஷயத்தைப்பற்றிப் பேசுவோம்.

முருகன்:—(வேடிக்கையாய்) என் சாப்பாட்டுருசியையும் கெடுக்க வேண்டாம் என்று நானும் வேண்டுகிறேன். நாராயணி, நீ ஒரு முட்டாள். மணவாளரே! நீரும் ஒரு இளங்கன்னியின் பிடிவாதத்தைச் சகித்துமன்னித்திருக்கவேண்டும். வயதாகும்போது தன்படியே தெரிந்துகொண்டுவிடுவாள். பாரும், என்மனைவியை. நான் சொல்வதற்கு ஒன்றுகூட எதிர்சொல்வதில்லை. என்கோரிக்கையின்படியே எப்பவும் நடப்பவள். நான் "கடவுள்கிருபை, வேலைமுடிந்தது" என்று அவளை ஒருதரம் சொல்லச்சொன்னால், தங்குதடையின்றி உடனே சொல்லிவிடுவாள்.

வள்ளி:—(கோபக்குறியுடன்) அதை நான் சொல்லமாட்டேன்.

முருகன்:—ஏனோ?

வள்ளி:—நீங்கள் அப்படிக் கேட்கமாட்டீர்களே?

முருகன்:—நான் அப்படிச் சொல்லும்படி கேட்டாலோ?

வள்ளி:—அப்படியானால் சொல்லமாட்டேன் என்பேன்.

முருகன்:—(பாதி சிரித்தும் பாதி சிரிக்காமலும்), அப்படியா சொல்வாய்? நிஜமாகவா சொல்லுகிறாய்?

வள்ளி:—நிஜமாகச் சொல்லுகிறேன்.

முருகன்:—எனது வேண்டுகோளை மறுக்கவாபோகிறாய்?

வள்ளி:—(மன உறுதியுடன்) சந்தேகமில்லாமல்.

மண:—என்னை மன்னியுங்கள்; நாம் வேறுவிஷயத்தைப்பற்றிப் பேசுவோம்.

முருகன்:—அதென்ன பேடித்தனம்! அது உதவாது. இந்த மாதிரி இதுவரை நடக்கவில்லை. இரண்டில் ஒன்று இப்பொழுதே

தெரியவேண்டும். என் னருமை மனைவியே! "கடவுள்கிருபை; வேலை முடிந்தது" என்று ஒருதரம் தயைசெய்து சொல்லிவிடு.

வள்ளி:—என் வழக்குக்கு ஒன்றும் வாரதீர்கள்!

முருகன்:—தயைசெய்து சொல்லிவிடு.

வள்ளி:—மு—டி—யா—து.

முருகன்:—(சிரித்து, பிறகு கொஞ்சம் கடுப்புடன், ஆனால் கோபத்தைப் பொங்கவிடாமல்) நான் தினசரி என்வேலை முடிந்தபொழுதெல்லாம் இந்தமாதிரி ஒருதரம் சொல்லிவருகிறேனே. இதில் என்ன தவறு இருக்கிறது? ஒருதரம் சொல்லிவிடு?

வள்ளி:—மா—ட்—டே—ன்.

நாரா:—அம்மா!

முருகன்:—வள்ளி!

வள்ளி:—(அதிக உறுதியுடன்) மாட்டவே மாட்டேன்.

முருகன்:—என்வள்ளி! சொல்லிவிடு.

வள்ளி:—நான் சொல்லவே மாட்டேன்.

முருகன்:—(நின்றுகொண்டு). விளையாட்டு வேண்டாம். இனி, உன் முரண்டையே உன் பெண்ணுக்கும் கற்றுக்கொடுப்பாய்போலும்—தாயைப்போலப் பெண் அல்லவா?

மண:—நான் உங்களைக் கெஞ்சி வேண்டிக்கொள்— —

வள்ளி:—(நின்றுகொண்டு) இங்கும் பழைய அனுபவமே வெளியாகிறது. பெண்களை அடக்கி ஆள்வதில் ஆண்கள் எப்படியும் ஒன்று சேர்ந்துவிடுவார்கள். தன் பெண் என்றும் கவனியாமல் ஒரு பிதா பிதற்றுவதைப் பார்.

முருகன்:—நான் ஒருவர்பக்கமும் வாதிக்கவில்லை. என் வழக்கைத் தான் சொல்லுகிறேன். என்பெண் அவள்புருஷன் ஆகியவர்கள் வழக்கைப்பற்றி எனக்குக் கவலையேயில்லை. என்வழக்கு உன்னிடம் தீர வேண்டியுள்ளது. அந்த வார்த்தைகளை ஒருதரம் சொல்லும்படி இப்பொழுது நான் கட்டளை இடுகிறேன்.

வள்ளி:—தன் மனைவியிடமிருந்து இப்படி ஒரு அசட்டுத்தனத்தைப் பெற விரும்பலாமா?

முருகன்:—அசட்டுத்தனமோ இல்லையோ, அது என் கவலையில்லை; அது சிந்திக்கும் விஷயமுமில்லை. உன் கற்புக்கு அதாவது சொற்றிறம்பாமைக்கு, இதுவே ஒரு உரைகல்லாகும். கீழ்ப்படிதலை நிரூபிப்பதற்கன்றோ ஹிரண்யனும் எல்லாரையும் "ஹிரண்யாய நம:" என்று கற்க ஏவினான்.

வள்ளி:—வாஸ்தவம். அது தவறானதாயும் நல்வழிக்கு விரோதமாயுமிருந்ததால் பிரகலாதாழ்வாரைப்போன்ற புரட்சிக்காரர்கள் ஏற்பட்டார்கள்.

நாரா:—நாங்களும் பிரஹலாதனைப்போல் எதிர்த்தே பேசுவோம்.

வள்ளி:—சமயம்நேரிட்டால் நாங்களும் எங்கள்புருஷர்களை எதிர்க்கத்தான் வேண்டிவரும்.

நாரா:—நாங்கள் மனைவிகள்—அடிமைகளா?

வள்ளி:—எந்தநாட்டிலேனும் வேறுவிதமிருக்கலாம். எங்கள் நாட்டில் மனைவிகள் அடிமைகள் அல்லர்.

நாரா:—புருஷர்கள் இந்நாட்டிலும் அடிமைத்தனம் பேண விரும்புகிறார்கள், அவர்கள் நடத்தையும் அப்படித்தான் தோன்றுகிறது.

வள்ளி:—(வெகு கோபத்துடன்) ஆனால் நாம் அடிமைகள் அல்லோம். நமது உரிமைகளைக் காக்க நமக்கு வழியும் தெரியும்; அதற்குப் பாடும் படுவோம்.

நசா:—குருட்டுத்தனமாய்க் கீழ்ப்படிதல் ஒரு அடிமையின் நற்குணமாகும்.

வள்ளி:--புருஷர்கள் கட்டளையிட்டால், அது புத்திக்கும் யுக்திக்கும் அனுபவத்துக்கும் ஒத்து இருக்கிறதா என்று சோதனை செய்தே பின்னர் அதன்படி நடப்போம்.

நாரா:--அப்படிப்பட்ட அசட்டுக்கட்டளையை ஒருபொழுதும் நிறைவேற்றேம்; முக்காலும் மாட்டோம்.

வள்ளி:--மாட்டவேமாட்டோம். (இருபெண்மணிகளும் ஒருபுறமாகத் திரும்பி மெல்லப் பேசிக்கொள்ளுகிறார்கள். முருகனும் மணவாளனும் பேச முயலுகிறார்கள். பிறகு வெட்கி மௌனம்சாதிக்கிறார்கள்).

முருகன்:-(மணவாளனைப்பார்த்து) தெரிந்ததா? நாம் ஜெயித்தோம். பெண்பாலர்களை நமக்கு விரோதமாகக் கிளம்பச்செய்துவிட்டோம், பார்த்தாயா?

மண:--(ஒருபுறமாய்) நாம் என்னசெய்வது இப்பொழுது?

முருகன்:--(ஒருபுறமாய்) உம்மிஷ்டப்படிசெய்யும் மணவாளரே! இந்த முரண்டு என் டிபின் ருசிமுழுவதையும் கெடுத்துவிட்டது. டிபினைச் சரியான சுமுகத்துடன் சாப்பிடவில்லையானல், இராச்சாப்பாடு மண்தான்.

மண:--(ஒருபுறமாய்) அதற்காக நாம் தாழ்ந்துவிடுகிறதா?

முருகன்:-(ஒருபுறமாய்) மறுமகனே! இந்தச்சண்டையிலே ஒரு வருக்காவது லாபத்தைக்காணேம். என்னவோ நான் ஏமாந்துபோய் விட்டேன். கொஞ்சம் கோபம் வந்தது; ஆனால் இப்பொழுது ஆற்றிவிட்டேன் அதை. என்ன இருந்தாலும் ஸ்திரீகள் முற்றும் பிசகாய் இருக்கமாட்டார்கள். கடைசியாக யோஜித்தால், முரண்டாய் ஒன்றைக் கேட்பதும் அதை ஒரே முரண்டாய் மறுப்பதும் சம எடையாகவே இருக்கும் என்று தோன்றுகிறது.

நாரா:--(தாயைப் பார்த்து) என்தாயார் என்பக்கம் சேர்ந்து இவ்வளவு பிடிவாதம்செய்வாள் என்று முன்பே தெரிந்திருந்தால் அந்த வேண்டுகோளை விளையாட்டாகவே எண்ணி அவ்வார்த்தைகளைச் சொல்லி

வழக்கை முடித்திருப்பேன். ஆனால் இப்பொழுது எப்படிப் பின் வாங்குகிறது?

வள்ளி:—(நாராயணியைப் பார்த்து) ஒருபொழுதும் அக்கொடியவர்களுக்கு இணங்கக்கூடாது.

நாரா:—(ஒருபுறமாய்) எனக்கும் திடச்சித்தம் உண்டு என்பதை அவர் அறியச்செய்வேன்.

வள்ளி:—(ஒரு புறமாய்) அதுதான் சரி. பலக்குறைவைக் காட்டவே கூடாது. என் புருஷனுக்கும் தெரியட்டும். இன்னும் எத்தனையோ தடவை கெஞ்சினாலன்றோ நான் இலகுவில் சம்மதிப்பேன் அதைச் சொல்ல.

நாரா:—(ஒருபுறமாய்) தாயே என்னை நழுவவிடாது எனக்குத் துணை நின்று உதவுவீர்களா?

வள்ளி:—(ஒருபுறமாய்) அதெற்கென்ன சந்தேகம்?

முருகன்:—(ஒருபுறமாய், புத்திசாலிமணி தனாயிருந்தால், சரிதான் என்று ஒருபடி இறங்கிவிடுவான்.

மண:—(ஒருபுறமாய்) ஒருபடி இறங்க எனக்கும் இஷ்டந்தான்; ஆனால், மானம்—

முருகன்:—(ஒருபுறமாய்) வெற்று உரைகள்—கருத்தில்லாமொழிகள்!—இறங்குதல் மனதுக்கு வருத்தத்தையே கொடுக்கும்; ஆனால் அதை நாம் சமத்காரமாய்ப் "பெருந்தன்மை உணர்ச்சி" அல்லது "பிறர்நலம் பேணும் உணர்ச்சி" என்று சொல்லிவிடலாம். கிடக்கு, வேடிக்கையாக இன்னுமொருமுறை பேசிச் சமாதானம் செய்துவிடு.

மண:—(ஒருபுறமாய்) அதுதான் சரி. ஒரு வேடிக்கை வேண்டும்? சரி, இதோ சமாதானம்— — (விரைவாக வெளியேபோகிறான்).

முருகன்:—(உரத்த சப்தத்தில்) குழந்தைகளே! கவனியுங்கள். உங்கள் ஐக்கிய வார்த்தை என்னால் தாங்கமுடியவில்லை. சரி! முதலில் நன்றாய் டிபினைச் சாப்பிட்டுக் கொஞ்சம் பலமடைந்து பிறகு உங்கள்

சண்டையில் மறுபடியும் புகுகிறேன் (நாற்காலியில் அமர்கிறான். சற்று நிதானமாய்) அப்பா! கடவுள்கிருபை, வேலைமுடிந்தது—என்று ஒருவர் ஆரம்பம்செய்தால் போதுமே. (சாப்பிடுகிறான்)

நாரா:—அருமைத்தாயே! நாமும் ஆரம்பிப்போமா?

வள்ளி:—ஆமாம். நமது முட்டாள்தனத்தால் டிபின் வீணாய்ப் போகிறது. (உட்காருகிறாள்.)

மண:—(கையில் இரண்டு கராச்சிச் சேலைகளுடன் மனோரம்மியமாய் உள்ளே பிரவேசித்து) கண்ணே! நமது சண்டை ஓயவேண்டும். என்னுடன் சமாதானமாய்ப் பேசு; உன்கையைக் கொடு. சண்டைக்கு அடிப்படை நான்தான் என்று எனக்குத் தெரிகிறது. அந்தத் தோஷ பரிகாரார்த்தமாக இந்தப்புடவைகளில் ஒன்று உனக்கு இப்பொழுது வெகுமதியாகத் தருகிறேன். எதுவேண்டும்? (இரண்டுசேலைகளையும் தன்கைகளில் பிரித்துக் காட்டுகிறான்) சொல்.

நாரா:—(கொஞ்சம் நாணிக்கொண்டு) இதெல்லாம்—

மண:—பொறுக்கி எடு.

நாரா:—இப்பொழுதா?

மண:—ஆமாம், உன் இஷ்டத்தைச்சொல்.

நாரா:—(மனது இல்லாததுபோல், ஒன்றை விரலால் காட்டி உடனே அதைப் பின் இழுத்துக்கொள்ளுகிறாள்).

மண:—வலதுகையிலுள்ளதா வேண்டும்? சரி.

நாரா:—(தலையை அசைக்கிறாள்).

மண:—(மற்றொன்றை மேஜையில்வைத்து அதை அவளுக்குக் கொடுக்கிறான்) உன் உடலுக்கு அது நன்றாகப் பொருந்தும். (கொஞ்சம் பின்வாங்கி) ஆக, இப்பொழுது உன்னைச்சமாதானப்படுத்த முக்கால் வழி வந்துவிட்டேன்........

நாரா:—(மிகவும் மனதில் கஷ்டப்பட்டுத் திடீரெனப் பேசுகிருள்) அம்மா! கடவுள்கிருபை—(பிறகு அவன் காதில்) வேலேமுடிந்தது (உடனே வெட்கி முகத்தை மறைத்துக்கொள்ளுகிருள்.)

போகி:—(ஒரு பிளேட்டைப் பக்கமேஜையில்வைத்து, பரிமாறுவதற்காகப் பின்னுல் நிற்கிருன்.)

முருகன்:—மெச்சினேன், சிறுவர்களே! மெச்சினேன் உங்கள் நடத்தையை.

மண:—சாந்தி உண்டாய்விட்டது.

நாரா:—இப்பொழுதுமாத்திரமல்ல. என்றைக்கும்!

மண:—இனி எங்களுக்குள் சச்சரவு உண்டாகாது.

நாரா:— ஒருபொழுதும் உண்டாகாது.

முருகன்:—பேஷ், அதுதான் நல்லவழி; வாருங்கள்; நாம் சாப்பிடுவோம்.

தாயி:—(ஒருகூடை பழம் கொண்டுவருகிருள். மேஜையில்வைத்துவிட்டு, ஒருபுறமாக, போகிக்கு முதுகைக்காட்டி நிற்கிருள். மணவாளன் நாராயணிகையில் ஒருபிளேட் சிற்றுண்டியை எடுத்து உதவுகிருன்).

வள்ளி:—(மேஜையண்டைபோய் மற்றச்சேலேயை ஆராய்ந்துபார்த்துத் தன் கணவனிடம்போய் அவன் முதுகைத்தட்டி) என்ன, உங்களேத்தானே,

முருகன்:—உம், உம்

வள்ளி:—அதோ பார்த்தீர்களா?

முருகன்:—என்ன?

வள்ளி:—ஒருசேலே பாக்கியிருக்கிறது.

முருகன்:—அப்படியா?

வள்ளி:— நாமும் சமாதானம்பண்ணிக்கொள்ளவேண்டாமா?

முருகன்:—சேலேமூலமாகவா? என்னிடம் அவ்வளவு பணமில்லேயே.

வள்ளி:—யோஜித்துச் சொல்லுங்கள்.

முருகன்:—அவ்வளவு விலைக்கு இல்லாமல், கொஞ்சம் குறைத்து வாங்கிக்கொள்ளேன். அவர்கள் வாலிபம்—தமது இளம் மனைவியின் கோபத்தை அவருக்குத் தாங்கமுடியாது; அதனால் அவ்வளவுவிலை வேண்டியதுதான். அவருக்கும் வயதாகிவிட்டால் அப்படிச்செய்யமாட்டார்.

வள்ளி:—ஐயோ! இப்படியா கேலிபண்ணுவது?

நாரா:—அப்படி நேரிடும் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

மண:—(குறுக்கிட்டு, போகியைப்பார்த்துச், சிரித்துக்கொண்டு) என்ன, தாயியுடன் உன் சண்டையைத் தீர்த்துவிட்டாயா?

போகி:—இல்லை, எஜமானே! அவள் இன்னும் முரண்டு அடிக்கிறாள்.

தாயி:—ஐயா, (சங்கடத்துடன்) ஆனால்......

நாரா:—(புன்னகையுடன்) தாயி! நீ படியவேண்டும், நீ அவ்வார்த்தைகளைச் சொல்லிவிடு.

தாயி:—அம்மா! உங்களுக்குத்தெரி—

நாரா:—ஆமாம், எங்களுக்கு எல்லாம் தெரியும்; தெரிந்துதான் சொல்லுகிறேன்.

வள்ளி:—எங்கள் ரம்மியத்தை நீயே கெடுத்தாய்—நன்றாய்த் தெரிகிறது. அதற்கு அபராதமாக, எல்லாருடைய காதிலேயும் விழும்படியாக அவ்வார்த்தைகளை நீ உரத்துச்சொல்லவேண்டும் சரி, தாமதியாதே, உடனே சொல்லிவிடு; ஆரம்பி (வார்த்தைவார்த்தையாய் மெதுவாய்ச் சொல்லுகிறாள்) க-ட-வு-ள் கி-ரு-பை வே-லை-மு-டி-ந்-த-து.

(எல்லாரும் ஒருமித்து ஆரவாரிக்கிறார்கள்)

வள்ளி:—(திடுக்கிட்டு) என்ன ஆச்சரியம் நடந்துவிட்டது. இப்படிச்சிரிக்கிறீர்கள்!

முருகன்:—(சிரித்து)கடைசியில், நீயே சொல்லிவிட்டாய், மனைவி! பேஷ். நல்லதுசெய்தாய்.

வள்ளி:—(தலைகுனிந்து) ஆம், சண்டைமுடிந்துவிட்டதல்லவா? சுபமே ஆகுக.

மண:—தாயி! நீதான் பாக்கி; சொல்லிவிடு.

தாயி:—(வெட்கி, மனவருத்தப்பட்டு) நான்மாட்டேன்.

நாரா:—அப்படியா! பார். உங்கள்இருவருக்கும் இரண்டுவாரத்தில் கல்யாணம்செய்துவைத்துவிடுகிறேன்.

தாயி:—(சந்தோஷமுற்று) கல்யாணமா? கடவுள்கிருபை!

எல்லாரும்:—சரி, பாக்கியும் சொல்.

தாயி:—(தான் பாதிவார்த்தைகளைச் சொல்லிவிட்டதை உணர்ந்து கொள்ளாது) சரியா? என்ன?

எல்லாரும்:—சொல்லு, சொல்லு, முடித்துவிடு.

போகி:—(கெஞ்சி) பாக்கியையும் சொல்லிவிடேன்.

தாயி:—ஓகோ! அதா? (ஒவ்வொருவரையாக நோக்குகிறாள்).

எல்லாரும்:—(பலவந்தத்துடன்) சொல்லு, சொல்லிமுடி.

தாயி:—(துரிதமாய்) வேலைமுடிந்தது. (முகத்தை முந்தாணியால் மூடிக்கொண்டு வெளியேபோய்விடுகிறாள்)

போகி:—(பின்தொடருகிறான்).

எல்லாரும்:—சபாஷ், சபாஷ், கடவுள்கிருபை! எல்லாம் நன்றாய் முடிந்தது!!

முற்றிற்று.

உ

கம்பராமாயணக் கௌஸ்துபமணிமாலை.

[கே. என் சிவராஜபிள்ளை.]

(௩௨-ம் பக்கத் தொடர்ச்சி).

54 கல்லெலாம் மணியே யான ; கனியெலாங் கனக மான ;
அல்லெலாம் ஒளியே யான ; ஆறெலா மமுத மான ;
புல்லெலாம் புலமே யான ; புகழெலாம் புகுத லான
சொல்லெலாந் தொகுத்துக் கம்பன் சூழ்ரச வாதச்சீரால்.

(வேறு)

55 பல்வளத்தின் மாரிவான்ப டர்ந்துதாரை சோரலோ
எல்வளத்தி னெல்வி நூ றெழுந்துசோதி வீசலோ
மல்வளத்தி ராமன்வில் வழங்குமீளி வாளியோ
சொல்வளத்தின் பெற்றி முற்றச் சொல்லலாக வற்றதோ ?

56 ஓடலாலு லாவலாலுள் ளோய்வுலைத்துற் சாகமே
மூடலால்மு னுங்கலால்மு ழுங்கலால் முகந்தணி
சூடலால் சொலித்தலால் தொனித்தலாலுள் ளம்நெகிழ்
பாடலாலின் பத்துருரிப் பாருளாரில் யாருளார் ?

57 வில்லெடுக்கும் மீளிகை விரல்தெரிந்த வாளிபோற்
சொல்லெடுக் கும் வன்மைபி லவைதொடுக்குஞ் சூழ்ச்சியில்
எல்லெடுக்குங் கம்பன்முன் னெதிரடுத்த பாவலர்
புல்லெடுக்கும் போர்மறவர் போலொதுங்கிப் போவரே.

58 சொல்லினுட் டுவன்றலாம் பொருட்டொடை தெருட்டலோ
கல்வினுட் டிரமனுக் கலைத்தெடுத்த லாகுமோ ?
புல்லுட னுயிர்த்திறன் பொறித்திறன் புலத்திறன்
எல்லைமாய வொன்றினென் றெழுந்தவா றெழுந்தவால்.

59 கடல்மடைதி றந்தகாட்சித் தாயினுங்கம் பன்கவி
அடலடைந்தொ ளிர்வசொல்வ ளத்துமட்டி னன்றுகாண்
உடலடைந்தி யக்குயிர்போ லொண்பொருளு டோடியாற்
றிடையடைந்தொ ழுக்குபோலி சையுமுள் ளிழுக்குமால்.

60 நாடிநாடிப் பாவல்லோர் நயந்தசெஞ்சொல் மாமணி
மூடிமூடி வைத்தசெப்பும் முற்றுமுட்டல் செய்வதோ ?

தேடித்தேடிச் சென்றுமன்னர் சேர்கிலா மணித்திரள்
கோடிகோடி யாக்குவிக்கும் கம்பனாழி கூலமே.

61 ஐயின் வாரிக் கொண்டவா ரமுதளாவு சீர்பதம்
கையின் வாரித் தூவினர்மற் றைக்கவிஞர் ; கம்பனோ
மெய்யின் வாரிக் கொண்டசொல் விரைமுகந்து போகமே
வைய மாரு மாறுவட்டி வட்டியாகக் கொட்டினன்.

(வேறு)

62 பொருள்தேடிடப் புகுவார்மிடிப் புரையாடிடல் முறையோ
தெருளாய்ந்துறத் திரிவார்செறி மருள்மாய்ந்திறல் திறனோ
அருளுடைய வுளத்தார்கவி யருட்பாவினை மிகத்தாம்
சுருள்சூடுருத் திரமாமெனத் தொகுத்தாரிருள் மிதந்தார்.

63 முன்னோர்வினை விளைவோகலை முடிப்பார்தவ முடிவோ
மின்னாள்தமிழ் மிளிர்மேனியின் மெலிவோ பிணிகலிவோ
பின்னானுறை வார்கொண்டதோர் பித்தோகவி முத்தைச்
சின்னாபின மாக்கிட்டுருச் சிதைத்தார்திருப் புதைத்தார்.

64 அறியார்செயுந் தீங்கோசிறி தறிந்துமறி யாராய்
வெறியார்புரி வினைமுன்னரே வெளிறுமெனல் மெய்யே
குறியாதுமுன் னோர்பாட்டுறை குறைப்பெய்தனர் பின்னோர்
செறியாதன செருகாங்கவி யுளவோவுளச் செருக்கால்.

65 குருடனெறிக் காட்டக்குறி யிடங்கூடிடல் செலுமோ ?
புருடன்வெலப் பேரரையொரு பூவைவெலப் புகுமோ ?
அருடன்வரத் தாலாங்கவி யறிவான நவிலேயேல்
மருடன்வயத் தாராய்த்தொடர் வழிவிட்டுழல் வாரே.

66 எல்லார்விரி வெயிலேச்சில ரிருளோவென மருளாப்
புல்லார்சிறு விளக்காலொளி புகட்டப்புகுந் தனரே
முல்லைமுருக் கவிழ்மாமணம் முடையென்றிவ ரடையாழ்
வில்லைவெறி யளவாவெறி யளவாமிகுத் துரைத்தார்.

67 அழகுக்கழ கணிதலருஞ் செயல்யாவினு மரிய
பழுநும்பழக் கனிவைப்படுங் கனிவாக்கலும் பழுதே ;
மழைத்தாரைபோற் கம்பன்பொழி வான்காவிய வமுதைக்
குழைத்தாரென லன்றிச்சுவை குவித்தாரென லாமோ ?

68 தெய்வமணம் நாறியுயிர் கிளைக்குங்கவித் தெரியற்
செய்வான்வரு மலரோசிறு தரைசிந்தின வலவே;
மெய்வானுறை தருநின்றவன் மிளிர்மாமலர் பொறுக்கிப்
பெய்வான்தனிப் பிணையலிதைப் பிறிதார்கமழ் பிணிப்பார்?

69 மின்னற்பிழம் பாலுமெரி வெயிலோன்கதி ராலும்
பொன்னின்னொளி யாலுஞ்சுவர் பேரக்கிமணிக் குவைக்காழ்
தன்னிற்புரை தபுத்தேசவி தளந்தந்துயர் கம்பன்
கன்னிச்சுடர் காலப்பொலி கவிமந்திர மமைத்தான்.

70 கவிமாலிகை புனைவாரிவண் கடந்தேகவின் கிடந்த
சவியோவியச் சுவைப்பால்விழி யிமைப்பற்றுயிர்ப் பெடுப்பர்
புவியுள்ளுறை யொருவனிதிற் புரைகாணிய விரைவான்
அவிகொள்வள வமுதிற்சுவை யறுபாகமாய் வானே.

(வேறு)

71 சொல்கண்டார் சொல்லே கண்டார்; சொல்லினுட் சொலிக்கும் ஞான
எல்கண்டார் எல்லே கண்டார்; இனிமையோ டிகலுஞ் சந்த
மல்கண்டார் மல்லே கண்டார்; மகிழ்கவித் துறைகை போயு
வல்கண்ட புலவர் யாரிவ் வாகவி முடியக் கண்டார்?

72 மொழிவளம் மொழிகு வேனோ? மொழிகதைத் தருண முன்னிப்
பொழிவளம் புகலு கேனோ? பொருள்வளம் புடைத்து விம்மிக்
கழிவளங் கழறு கேனோ? காவியக் கழனி யோங்கிச்
செழிவளஞ் சிரித்து முத்தந் தெரித்தொளி சிதறும் பாவில்.

(வேறு)

73 "பொன்கொண் டிழைத்தமணி யைக்கொடு பொதிந்த
மின்கொண் டமைத்தவெயி லைக்கொடு சமைத்த
என்கொண் டியற்றியவெ னத்தெரிகி லாத"
மன்கொண் டமாமதிம ருட்டுகவி மாடம்.

(வேறு)

74 மூவரும் மூவரின் முதல்வரு மிவராள்
தேவரு மிதனிசை செவிமடுத் திடுவர்;
மேவரு மரசரும் விபுதரும் மேலாம்
பாவரு புலவரும் பருகலும் வியப்போ?

ஸ்ரீ:

மதிப்புரை.

1. ஸரஸ்வதி தமிழ்வாசக புத்தகங்கள்:- இத் தொடர்ச்சிவெளியீட்டின் முதல் ஐந்து புத்தகங்கள் இதுபொழுது வெளிவந்துள்ளன. டிஸ்டிரிக்ட் எஜுகேஷனல் ஆபீசர் ஸ்ரீமாந் G. தாமோதர முதலியார் B.A, L.T. அவர்களும், திருவையாற்று வடமொழிக் கலாசாலைத் தமிழாசிரியர் திரு. L. உலகநாதபிள்ளையவர்களும் இவற்றின் ஆசிரியராவர்.

இவர்களில் ஒருவர் வித்யா விசாரணை உத்தியோகஸ்தரும் மற்றொருவர் தமிழ்நூலறிவில் தலைசிறந்தவருமாதலால், இதுகாறும் வழங்கிவரும் இத்தகைய புத்தகங்களெல்லாவற்றிலும் இவை மிகச் சிறந்து விளங்குகின்றன. இவற்றின் அமைப்பு, பள்ளியிற் பயிலும் மாணவர்களின் போதனைமுறைக்கு மிகவும் ஏற்றதாகும். உள்ளுறையானபாடங்கள்யாவும் சிறுவர்கட்குத் தாய்நாட்டில் அன்பும் தமிழ்மொழியில் ஆர்வமும் ஊட்டி, அறிவை வளரச்செய்யும் ஆற்றலுடையன. அன்றியும் இளமைப்பருவம் தொடங்கி இலக்கணவுணர்ச்சியோடு பிழையறப் பேசவும் எழுதவும் பழகுதற்கு இப்புத்தகங்கள் கருவியாகவல்லன.

ஆகையால் இவற்றைப் பதிப்பித்துவரும் இராஜமகேந்திரபுரம் திரு A. இலட்சுமணசுவாமிநாயுடு அவர்களின் நன்முயற்சி பாராட்டத்தக்கது. மேலும் இவற்றின் தொடர்பான மற்றப்பாடப்புத்தகங்களையும் அவர்கள் விரைவில் வெளியிட்டு உதவுவார்களாக.

இவ் வைந்து புத்தகங்களும் முறையே, ரூ 0—3—0, 0—3—0, 0–4–0, 0–5–0, 0–6–0 ஆகத் தனித்தனி விலைக்குக் கிடைக்கும். வேண்டுவோர், திரு. அ. இலட்சுமணசுவாமிநாயுடு அவர்கள், ஸரஸ்வதி பவர்ப் பிரஸ், ராஜமசேந்திரபுரம், (கோதாவரி ஜில்லா) என்ற விலாசத்திற் பெறலாம்.

2. ஸ்ரீ ராமாநுஜர் சரித்திரம்:— "மலையிட்ட தீபமென மால் சமயத்தை மண்மேல், நிலையிட்ட பூதூர் எதிராஜ"ரின் திவ்ய சரித்திரத்தைக் கூறுவனவாய் முற்காலத்தவும் பிற்காலத்தவுமான நூல்கள் பலவுள. அவை பெரும்பாலும் வடமொழிப் பயிற்சியுடையார்க்கன்றி

எளியோர்க்கு எளிதின் விளங்குவனவல்ல. ஆகையால் அக்குறையை நீக்கக்கருதி, மதுரைக்காலேஜ் தலைமைத்தமிழ்ப்பண்டிதர், ஸ்ரீமாந். சு. ஸ்ரீநிவாஸ ஐயங்காரவர்களால் தனித் தமிழ்நடையில் எழுதப்பெற்றது இச்சிறுநூலாகும்.

இது, முந்து நூல்களின் வழிநிலைபிழையாது செல்லுகின்றது; பலவிடங்களிலும்காணும் விஷயங்களை ஒருங்குதொகுத்து, மிக விரிவும் சுருக்கமுமின்றிக் கற்போர்க்கு இன்பம்பயக்க எடுத்துரைக்கின்றது. அன்றியும் இராமாநுஜநும் பிறரும் இயற்றிய மிகவும் அரிய தமிழ்ப் பாடல்கள் சில இதனுள் ஆங்காங்கு எடுத்தாளப்பட்டுள்ளன; சரித வாராய்ச்சியோடும் தமிழ்நூல்களோடும் பொருந்த இராமாநுஜருடைய காலம் நிருணயிக்கப்பட்டிருக்கிறது. இவை மிக்க பயனளிப்பனவாம். ஆகவே, தனித்தமிழில் இயன்றுள்ள இதுபோன்ற புத்தகங்களில் இதுவே தலைமையுடையதென்னலாம்.

இத்தன்மையால் இது ஸ்ரீவைஷ்ணவர்களேயன்றித் தமிழ்மக்கள் அனைவரும் பொதுவாக விரும்பிப் போற்றுதற்குரியது. அன்றியும், பல அரிய நீதிகளையும் சமயவுண்மைகளையும் நன்கு புகட்டுவதால், இது பள்ளிக்கூடங்களிற் பாடப்புத்தகமாதற்கு மிகுதியும் தகுதியுடையது. விலை அணா 10. விலாசம்:—மகா-ா-ா-ஸ்ரீ இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனாரவர்கள், கோபால் மஹால், மதுரை.

3. குலோத்துங்க சோழன்:—இஃது, இப்பெயரோடு சோழகுலத்தின் திலகமாய் விளங்கிய சக்ரவர்த்தியின் சரித்திரத்தைக் கூறுவது; கல்வெட்டுக்களையும், செப்பேடுகளையும் தமிழ்நூற்சான்றுகளையும் ஆராய்ந்து ஒரு கோவைப்படத் தொகுத்துக் கும்பகோணம் வாணாதுறை ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர், ஸ்ரீமாந். T. V. சதாசிவபண்டாரத்தாரவர்களால் எழுதப்பெற்றது.

இதன் வசனநடை எளிமையும் இனிமையும் வாய்ந்தது. அக்கால அரசியல்முறையும், நாகரிகநிலையும் முதலிய எல்லாம் இதனால் அறிந்து மகிழற்பாலன. அன்றியும், ஒவ்வொரு நிகழ்ச்சியும் இதிற் காலக்குறிப்போடு நன்கு விவரிக்கப்பட்டுளது.

சரிதவாராய்ச்சியில் தமிழ்ப்புலவர்கள் அதிகமாகத் தலையிடவில்லை என்னும் குறையுடைய இக்காலத்தில் இதன் ஆசிரியருடைய ஊக்கமும் உழைப்பும் போற்றுதற்குரியன. இதன் விலை அணா 12; வேண்டுவோர் கும்பகோணத்தில் ஆசிரியரிடம் பெறலாம்.

4. மாணவர் உயர்தர இலக்கணம் (முதற்பாகம்):— இது எஸ். எஸ். எல். ஸி. பாடத்திட்டத்தைத் தழுவி, தூத்துக்குடி, கால்டுவெல் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் திரு. J. C. சுந்தரம் அவர்களால் எழுதப்பெற்றது; எழுத்தியல், சொல்லியல், புணரியல், பொதுவியல் என்னும் நான்கு பகுதிகளோடு நன்னூற் சூத்திரங்களிற் சிலவற்றையும் அநுபந்தமாகக்கொண்டது.

சிறுவர்களும் எளிதாக வுணருமாறு தெளிவாக அமைந்திருப்பதால் இது பள்ளிப்பாடமாகக் கொள்ளத்தக்கது. விலை அணா 6. வேண்டுவோர், ஆசிரியரிடம் பெறலாம்.

5. (திருச்சிராப்பள்ளி) கல்வெட்டு:—இது, புதுப்பட்டி ஆசிரியன், ஆதிநாதன் என்பவரால் தொகுக்கப்பெற்றது. இதில், திருக்கற்குடி என்னும், உய்யக்கொண்டான் திருமலையின் சாசனங்கள் பத்தொன்பதும், தாயுமானசாமிமலைப் பல்லவர்குகையின் சாசனம் ஒன்றும், திருவெறும்பூர்ச் சாசனம் மூன்றும், திருவானைக்கா அரசநிருபத்தோடு கூடிய சாசனங்கள் ஐந்தும், ஆகிய இவை அச்சிடப்பட்டுள்ளன. இச்சிறு புத்தகத்தின் விலை அணா 4 விலாசம்: 'ஆசிரியன், ஆதிநாதன்' பாலவித்யாசாலை, புதுப்பட்டி, பொன்னமராவதி (புதுக்கோட்டை).

6. ஆனந்த லக்ஷ்மி:—இது ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை. எத்தனையோ பல விஷயங்கள் இதில் மிகவும் எளிய நடையில் எழுதப்பட்டுள்ளன. ஆகையால் இது சிற்றறிவினரும் விரும்பி வாசிப்பதற்குரியது. வருடச் சந்தா ரூ. 1. விலாசம்:—ஆனந்தலக்ஷ்மி ஆபீஸ், நிர். 7, தண்ணீர்த்தொட்டித்தெரு, சென்னை.